**MCOP.No.310/2024 ம.சா.1 –பழனிச்சாமி 11.08.2025**

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. எனக்கு கார்த்திக் என்பவர் போன் மூலம் விபத்தை பற்றி தகவல் கூறினார். சம்பவத்தின்போது என் மகன் இருசக்கர வாகனத்தில் சென்றிருந்தார். உங்கள் மகன் ஓட்டிய வாகனத்திற்கு ஓட்டுநர் உரிமம் மற்றும் காப்பீடு இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு காரணம் கார் என் மகன் மீது மோதியதுதான். விபத்திற்கு பிறகு காரின் ஓட்டுநர் உங்கள் மகன் தான் விபத்திற்கு காரணம் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. கார் ஓட்டுநர் உங்கள் மகன் மீது கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கையும் புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. உங்கள் மகன் இறந்தபடியால், உங்கள் மகன் மீது வழக்கு தொடரவில்லை என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. இதுகுறித்து குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் முடிக்கப்பட்டு, வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்லுகிறீர்கள் என்றால் சரியல்ல. எனக்கு எழுத, படிக்க தெரியாது, கைரேகைதான் வைத்தார். 2 ஆம் எதிர்மனுதாரர் என் மனைவி, அவர் கையொப்பம் போட தெரியும். விஜயன், த/பெ.சின்னப்பையன் என்பவர் எனக்கு உறவினர். காப்பீட்டு நிறுவனத்தில் இருந்து வழக்கு தொடர்பாக என்னை

விசாரிக்கவில்லை. காப்பீடு நிறுவனம் உங்களை விசாரிக்கும்போது உங்கள் மகன்மீதுதான் தவறு என்று கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்களும், உங்கள் மனைவியும் காப்பீட்டு நிறுவனத்தினால் விசாரித்து உங்கள் மகன் மீதுதான் தவறு என்று ஒப்புக்கொண்டு நீங்கள் கைரேகையும், உங்கள் மனைவி கையொப்பமும், மேற்சொன்ன விஜயன் உங்களுக்கு படித்து காண்பித்து நீங்கள் கையொப்பம் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் உங்கள் மகனின் அஜராக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றும், ஆகையால் எதிர்மனுதாரர்கள் உங்களுக்கு நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் எதிர்மனுதாரர்மீது எந்தவொரு தவறும் இல்லை என்பதால்தான் காவல் நிலையத்தில் அவர் புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் மகன் இறந்த பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். காவல் நிலையத்தில் நீங்கள் கொடுத்த புகாரின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்களா, அதைப்பற்றி விசாரித்தார்களா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் கொடுத்த புகாரின்மீது காவல்துறையினர் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால் நீங்கள் காவல்துறை மீது மேல்நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் எடுத்துள்ளேன். அவ்வாறு எடுத்ததற்கான நடவடிக்கை குறித்து

நீதிமன்றத்தில் ஆவணங்களாக தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கொடுத்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் நடவடிக்கை எடுக்கவில்லை, இந்த வழக்குதான் தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் 1 ஆம் எதிர்மனுதாரர்மீது தவறான புகாரை கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. காவல் துறையினர் 1 ஆம் எதிர்மனுதாரர்தான் இந்த விபத்திற்கு காரணம் என நடவடிக்கை எடுக்காததால் நீங்கள் இந்த மனுவை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் மகனின் வருமானத்தை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நீங்கள் உங்கள் மகனின் வருமானத்தை மிகைப்படுத்தி இந்த வழக்கில் கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் எதிர்மனுதாரர் அரசியர்வாதியின் உறவினர் என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எந்தவித சட்ட முகாந்திரமும் இல்லை என்பதால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கு மூல காரணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**ஒம்/.K.H.இளவழகன்**
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**கரூர்.**